# அருள்மிகு ஸ்ரீ பாகம்பிரியாள் சமேத ஸ்ரீ சங்கரராமேஸ்வரர் திருக்கோவில்

## தூத்துக்குடி



tnhrce.org

### ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

# மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்

**08.09.2017 - வெள்ளிக்கிழமை**

**காலை 06.45 - 07.45 மணிக்கு**

**மெய்யன்புடையீர்:-**

பாண்டிநாடே பழம்பதி என வாதவூரடிகளால் திருவாசகத்தில் போற்றப்பட்ட தென்பாண்டி நாட்டில் விளங்கும் சிவத்தலங்கள் பலவற்றுள் திருமந்திர நகர் எனும் இச்சிவத்தலமும் ஒன்றாகும். மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் ஆகிய இம்மூன்றாலும் முதன்மை பெற்ற இந்த ஸ்தலம் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

**ஸ்தலம்:-**

திருச்செந்தூரில் சூரசம்ஹாரம் முடிந்தபின் இந்திரன் மகளாகிய தெய்வயானை அம்மைக்கும், முருகப்பெருமானுக்கும் திருப்பரங்குன்றத்தில் திருமணம் நடைபெறுகின்றது. அதனை கண்டு களிக்க அம்மை அப்பனாகிய பார்வதியும், பரமேஸ்வரனும் இங்கு எழுந்தருளினர். அம்மை பரமேஸ்வரனை வணங்கி மந்திரம் ஓதித்தர வேண்டும் என்று கேட்டாள். ஓதிக் கொடுப்பதற்கு கடலோசையும், பனை ஓலையின் ஓசையும், குயவன் சட்டித் தட்டுகின்ற ஓசையும் இடையூறாக இருந்தன. அவைகளை அடக்கி ஆண்டவன் அம்மைக்கு திரு ஐந்தெழுத்தாகிய மூலமந்திரத்தை உபதேசித்தருளினார். அதனால் இந்நகருக்கு திருமந்திர மாநகர் என்று பெயர் வழங்கி வருகின்றது. இங்கு கௌசிகர், கவுதர், பரத்வாஜர், அத்திரி, போன்ற முனிவர்கள் வணங்கி அருள் பெற்றார்கள்.

tnhrce.org

**மூர்த்தி:-**

இத்தலத்தில் உள்ள சிவலிங்கப் பெருமான் காசிப முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவர். இவ்வூருக்கு அருகிலுள்ள மணவூரில் சங்கரராம பாண்டியன் எனும் குறுநில மன்னன் ஆண்டு வந்தான். பல்லாண்டுகளாக மக்கட் பேறின்மையால் மிகவும் வருந்தினான். அவனது வருத்தம் கண்ட பெரியோர்கள் காசி முதலிய பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடி வரும்படி கூறினர். அவனும் தன் மனைவி மற்றும் சுற்றத்தாருடன் கங்கையில் தீர்த்தமாடி காசி விஸ்வநாதரையும் விசாலாக்ஷி அம்பாளையும் வணங்கினான். அப்போது ஓர் அசரீரி அரசே! நீ வங்காள விரிகுடாக் கடல் பக்கமுள்ள வாஞ்சா புஷ்கரனி தீர்த்தமாடி, அங்கு ஓர் அடையாளம் கண்டு, அவ்விடத்தில் உள்ள சிவலிங்கத்தைப் பூசி ! மக்கட்பேறு உண்டு என்று கேட்டது. மன்னவனும் இந்நகர் வந்து தீர்த்தமாடி, திருநீற்றுப்பை அடையாளமாக இருக்கக் கண்டு, இப்புண்ணிய மூர்த்தியை வணங்கினான் – மீண்டும் அசரீரி, அரசே! காசிப முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட இச்சிவலிங்கத்திற்கு திருக்கோவில் எழுப்புவாயாக ! என்று கேட்டது. அவனும் சிலநாள் இங்கு தங்க, சுவாமி அம்பாள் அருளால் மனைவியும் கருக்கொண்டாள். அவன் அகமகிழ்ந்து இத்திருக்கோவிலைக் கட்டி பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்தான். இத்திருக்கோவில் அவனால் அமைக்கப்பட்டதால் பெருமான், ஸ்ரீ சங்கரராமேஸ்வரர் என்றும், அம்பாள் பாகம்பிரியாள் என்றும் திருநாமத்துடன் திகழ்கின்றனர். இங்கு வழிபட்டுக் குழந்தை வரம் பெற்றவர்கள், தங்கள் குழந்தைகளுக்கு சங்கரராமேஸ்வரன், சங்கரராமன், சங்கரன், பாகம்பிரியாள், சங்கரராமேஸ்வரி, சங்கரேஸ்வரி, சங்கரி, சங்கர பாகம் என்றெல்லாம் பெயர் சூட்டி மகிழ்வர்.

**தீர்த்தம்:-**

அந்தக் காலத்தில் இப்புண்ணிய திருத்தலம் ஒரு நெய்தல் நிலமாகவும், நெய்தல் நிலத்தில் ஒரு சோலையாகவும் இருந்திருக்கிறது. சேதுக்கரையிலிருந்து திருச்செந்தூர் வரையுள்ள புண்ணிய தீர்த்தக் கட்டங்களில் இதுவும் ஓர் புண்ணிய தீர்த்தக கட்டமாக இருந்திருக்கிறது. இப்புண்ணிய தீர்த்தக் கட்டத்திற்கு வாஞ்சா புஷ்கரணி என்று பெயர். மக்கள் பலரும் அந்த தீர்த்தத்தினால் பயனடைந்துள்ளர். இப்புண்ணிய தீர்த்தம் கோயிலின் முன் பகுதியிலுள்ளது. சென்றாடும் தீர்த்தங்கள் ஆனார் தாமே என்று அப்பர் சுவாமியின் வாக்கிற்கேற்ப வாஞ்சா புஷ்கரணி தீர்த்தமாகப் பெருமானே திகழ்கின்றார். இப்புண்ணிய தீர்த்தத்தால் நம் வினைகளனைத்தும் நீங்கப் பெற்று அம்மையப்பர் அருளால் எல்லா நன்மைகளும் பெறலாம் என்பது திண்ணம்.

இவ்வளப்பரிய சிறப்புகளனைத்தும் ஒருங்கே பெற்ற நமது திருமந்திரநகரில் நமக்கெல்லாம் அம்மை, அப்பராக வீற்றிருந்து அருள் பாலித்து கொண்டிருக்கும் **ஸ்ரீ பாகம்பிரியாள் சமேத ஸ்ரீ சங்கரராமேஸ்வரர் திருக்கோவிலில்** நிகழும் மங்களகரமான கலியுகம் 5118 கொல்லம் 1193ம் ஆண்டு ஹேவிளம்பி வருடம் **ஆவணி மாதம் 23மீ (08.09.2017) வெள்ளிக்கிழமையும்,** உத்திரட்டாதி நட்சத்திரமும், த்விதீயையும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் **(அன்று காலை 06.45 மணிக்கு மேல் 07.45 மணிக்குள்)** கன்யாலக்னத்தில் ராஜகோபுரம், விமானங்கள் மூலஸ்தானம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் **மஹா கும்பாபிஷேகமானது** கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலில் காணும் வண்ணம் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இனிய மஹா கும்பாபிஷேக விழாவில்

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

திரு. **கடம்பூர் செ. ராஜு** அவர்கள்

tnhrce.org

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

திரு. **சேவூர் எஸ். ராமச்சந்திரன்** அவர்கள்

மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்

திரு. **வி.எம். ராஜலட்சுமி** அவர்கள்

திருமதி. **எல். சசிகலாபுஷ்பா** அவர்கள்
மாநிலங்களவை உறுப்பினர்

திரு. **ஜெயசிங் தியாகராஜ் நட்டர்ஜி** அவர்கள்
மக்களவை உறுப்பினர்

திரு. **அபூர்வ வர்மா** இ.ஆ.ப அவர்கள்
அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி துறை

திருமதி. **ஆர். ஜெயா** இ.ஆ.ப அவர்கள்
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை

திரு. **எஸ்.பி. சண்முகநாதன்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர்

திரு. **ஆர். சுந்தர்ராஜ்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர்

திருமதி. **கே. உமாமகேஸ்வரி** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர்

திருமதி. **பெ.கீதாஜீவன்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர்

திரு. **அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர்

திரு. **பி.டி.ஆர்.ராஜகோபால்** அவர்கள்
தலைவர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

திரு. **சி.த.செல்லப்பாண்டியன்** அவர்கள்
முன்னாள் அமைச்சர்

திரு. **என். வெங்கடேஷ்** இ.ஆ.ப அவர்கள்
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி

திரு. **பெ. மகேந்திரன்** இ.கா.ப அவர்கள்
காவல்துறை கண்காணிப்பாளர், தூத்துக்குடி

திருமதி. **ந. திருமகள்** அவர்கள்
கூடுதல் ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை

திருமதி. **மா.கவிதா** அவர்கள்
கூடுதல் ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை

திரு.**அ.தி. பரஞ்ஜோதி** அவர்கள்
இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை

tnhrce.org

திரு. **க. செல்லத்துரை** அவர்கள்
துணை ஆணையர், (நகை சரிபார்ப்பு) இந்து சமய அறநிலையத்துறை

திரு. **மொ. அன்னக்கொடி** அவர்கள்
உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை

திரு. **இரா. செல்வராஜன்** அவர்கள்
உதவி கோட்டப்பொறியாளர், இந்து சமய அறநிலையத்துறை

மற்றும் ஆன்மீக பெரியோர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். தாங்களும் குடும்பத்துடன் மஹா கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு அருள்மிகு பாகம்பிரியாள் சமேத அருள்மிகு சங்கரராமேஸ்வரர் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**அ. பாலசுப்பிரமணியராஜன்**
தக்கார்

**ப. செல்லப்பா**
ஆய்வர், இந்து சமய அறநிலையத்துறை

**ச. அஜித்**
செயல் அலுவலர்

# நிகழ்ச்சி நிரல்

| தமிழ், ஆங்கில மாதம், கிழமை, தேதி, | நேரம் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| | | கிராம தேவதா வழிபாடு |
| ஆவணி 18 (03.09.2017) ஞாயிறு | காலை 07.00 மணி | அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாசநம், ஸ்ரீமஹாகணபதி ஹோமம், பிரம்மச்சாரிபூஜை, கஜபூஜை, கோபூஜை, பூர்ணாஹுதி, தேவதாஅனுக்ஞை தீபாராதனை. |
| | மாலை 06.15 மணி | கிராமசாந்தி, ராக்ஷோக்னஹோமம், பிரவேசபலி. |
| ஆவணி 19 (04.09.2017) திங்கள் | காலை 09.15 மணி | நவக்ரஹஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| | மாலை 06.00 மணி | தீர்த்த ஸங்கிரஹனம் (சமுத்ரராஜனை அழைத்தல்) |
| ஆவணி 20 (05.09.2017) செவ்வாய் | காலை 08.00 மணி | ஸ்ரீமகாலட்சுமிஹோமம், தனபூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| | மாலை 06.05 மணி | வாஸ்துசாந்தி, மிருத்ஸங்க்ரஹணம். |
| ஆவணி 21 (06.09.2017 புதன் | காலை 07.10 மணி | சாந்தி ஹோமம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், சம்ஹிதா ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை, ஆசார்யதசவிதஸ்நாநம், அக்னிசங்கிரஹனம், யாகசாலை ஸ்தண்டிலம் அமைத்தல். |
| | மாலை 04.00 மணி | விக்னேஸ்வர பூஜை, புண்யாக வாசனம், அங்குரார்ப்பனம் ஆசார்யரக்ஷாபந்தனம்,கும்பாலங்காரம், கலாகர்ஷணம், யாத்ராதானம், கடம்யாகசாலைப்ரவேசம், முதற்கால யாகசாலை பூஜை, திரவ்யாஹுதி, |
| | இரவு 09.00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை, அஷ்டபந்தன மருந்து சாத்துதல். |

tnhrce.org

| | | |
|---|---|---|
| ஆவணி 22<br>(07.09.2017)<br>வியாழன் | காலை 09.30மணி<br><br>மாலை 05.30 மணி | இரண்டாம் கால யாகசாலை பூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை.<br><br>மூன்றாம் கால யாகசாலை பூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| ஆவணி 23<br>(08.09.2017)<br>வெள்ளி | காலை 03.30மணி<br><br>காலை 05.30 மணி<br><br>காலை 06.45மணி முதல் 07.45 மணிக்குள்<br><br><br>இரவு 07.00 மணி | நான்காம் கால யாகசாலை பூஜை, நாடிசந்தானம், ஸ்பர்ஸாகுதி,<br><br>மகா பூர்ணாஹுதி, யாத்ராதானம், கடம் எழுந்தருளல்.<br><br>**அருள்மிகு ஸ்ரீபாகம்பிரியாள் உடனுறை ஸ்ரீசங்கரராமேஸவரர் இராஜகோபுரம், விமானங்கள் மூலஸ்தானம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு மஹாகும்பாபிஷேகம்**<br><br>மகா அபிஷேகம்<br>சுவாமி அம்பாள் திருக்கல்யாணம்<br>பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலா. |

tnhrce.org

**04.09.2017 அன்று முதல் சதுர்வேதபாராயணம், திருமுறை பாராயணம் நடைபெறும்.**

**கும்பாபிஷேகம் அன்று (08.09.2017) அன்னதானம் நடைபெறும் இடங்கள்**

**S.A.V. பள்ளி (இரண்டாம் கேட் அருகில்), சைவ வேளாளர் மண்டபம், வடக்குரத வீதி.**

**அனைவரும் வருக !** **இறையருள் பெறுக !**

சுபம்.

---

<u>சர்வ சாதகம், ஸ்தல அர்ச்சகர்கள்</u>

செந்தில் தந்திரி
சிவஸ்ரீ ம. சங்கரபட்டர்

சிவாகம ரத்னம்
சிவஸ்ரீ ரா. கல்யாண சுந்தர சிவாசாரியார்
(எ) செல்வம் பட்டர்
ஆலால சுந்தர வேத சிவாகம வித்யாலய முதல்வர்

செந்தில் தந்திரி
சிவஸ்ரீ ம. சுப்ரமண்யபட்டர்

சிவாகம பாஸ்கரா
சிவஸ்ரீ செ. சண்முகசுந்தரபட்டர்


tnhrce.org

காசிப முனிவர் அருள்மிகு சங்கர ராமேஸ்வரர் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்த அற்புதக் காட்சி

உ
சிவமயம்



# அருள்மிகு ஸ்ரீ பாகம்பிரியாள் சமேத ஸ்ரீ சங்கரராமேஸ்வரர் திருக்கோவில்

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

# மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்

tnhrce.org

திருச்சிற்றம்பலம்

**விநாயகர் துதி**

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வழி வலமுறை இறையே

**சுவாமி துதி**

சலமிலன் சங்கரன் சார்ந்தவர் கல்லால்
நலமிலன் நாள்தோறும் நல்குவான் நலம்
குலமிலராகிலும் குலத்திற் கேற்ப தோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே.

"தண்டுறைப் பார்க்க தலைவன் சேயாய் தோன்றி
எண்டிசையோர் போற்ற மனம் எய்திப்பின் - கண்டுமொழிப்
பார்வதியாள் தானும் பரனுடனே வந்து மந்திர
ஆர்வத்தைப் பெற்றான் ஆகும்
அப்போதெம் அம்மை அரனார் பதம் போற்றி
ஒப்பில்லா மந்திரத்தை ஓதென்றாள் - செப்பக்
கடல் பணையினோசை கலக்குவதைக் கண்டான்
படல் ஓசை மூன்றென்றான் பார்சு
"சங்கிரக வெண்பாமாலை" - இராமநாதபிள்ளை

**சுப்பிரமணியர் துதி**

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகுஞ்செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குரு புங்கவ எண்குண பஞ்சரனே

**அம்பாள் துதி**

அடையலர் தொல்நகர் மூன்றெரித்தன்ன
நடைமட மங்கையொர் பாகம் நயந்து
விடையுகந்தேறுதிர் வெள்ளடை மேவிய
சடையமர் வெண்பிறைச் சங்கரனீதே

**சண்டேஸ்வரர் துதி**

அண்டர்பிரானுந் தொண்டர் தமக்கு அதிபனாக்கி அனைத்து நாம்
உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்
சண்டசனுமாம் பதந்தந்தோம் என்றங்கவர் பொற்றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

திருச்சிற்றம்பலம்